# திராவிட சினிமா

18

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# எல்லாரும் இந்நாட்டு மன்னர்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

படங்கள் உதவி : ஞானம்





'உழைப்போர்க்கு வாழ்வு - உரிமையுடையோர்க்கு நாடு' என நல்லாரும், அறிவில் வல்லவரும் வகுத்தத் தத்துவம் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனும் முகப்பு வாசகத்தோடு தொடங்குகிறது திரைப்படம். ஜூபிடர் பிலிம்ஸ் நிறுவனத்துக்காக, மா.லட்சுமணன் எழுதிய மூலக்கதைக்குக் கலைஞர் திரைக்கதை-வசனம் எழுதிய படம் இது.

1960-ஆம் ஆண்டில், வின்சென்ட், பி.என். சுந்தரம் ஒளிப்பதிவில் பிரகாஷ்ராவ் இயக்கத்தில் வெளிவந்தது. இதற்குள்ளாக கலைஞரின் திரைத்துறை / அரசியல் துறை வளர்ச்சி வெகுவாக வளர்ந்து விட்டிருந்தது. இந்தப் படமே அதற்கான சாட்சி.

வலியன்கோடு சமஸ்தானமும், வள்ளுவன் குன்றமும் பக்கத்துப் பக்கத்து நாடுகள். வலியன் கோட்டின் மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் வேட்கையே வள்ளுவன் குன்றத்து லட்சிய வீரர்களின் பெருங்கனவு.

## சமகால அரசியல் பேசுபொருள்!

புரட்சிக்காரர்களுக்குத் தலைமை வெண்தாடிப் பெரியவர் மற்றும் அவரது மருமகன்கள் தங்கதுரை, தம்பிதுரை. பெயர்களிலிருந்து வசனங்களின் வீச்சுவரை வள்ளுவன் குன்றம் **'திராவிட நாடு'** என்பது வெளிப்படை. பேசுபொருளும் சமகால அரசியல் என்பது தெளிவாக இருக்கிறது. திரைக்கதை மறைபொருளாக அன்றைய ஆரிய-திராவிட முரணைப் பேசுகிறது. அதேவேளையில் சமகால அரசியலையும் சரித்திரப் புனைவாக்குகிறது.

கதைக்களம் சரித்திரப் படிமங்களை வைத்து சமகால அரசியல் பேசுகிறது. திவான் கட்டுப்பாட்டில் இருக்கும் செயலற்ற அரசர், இளவரசி, அவளது சாதாரணக் குடிமகனுடனான காதல் போன்ற திராவிடப் புனைவுச் சரித்திரம் இங்கும் உண்டு.

அண்ணாவின் **'கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது'** என்ற 'திராவிட நாடு' இதழ் தலையங்கமே திரைக்கதைக் களத்தின் ஆதாரம். இராஜகோபாலாச்சாரி அவர்களின் திருச்செங்கோடு 'வலியன் கோடு' எனும் ஆரிய மேலாதிக்கத்தின் புனைவான நாடாகியிருக்கிறது. திருப்பரங்குன்றம் 'வள்ளுவன் குன்றம்' எனும் புனைவான திராவிட நாடு ஆகியிருக்கிறது.

## ஆரிய - திராவிட மோதல்

காங்கிரஸ் கட்சியின் திருப்பரங்குன்றம் மாநாட்டில் காமராஜருக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்ட தலைமை தொடர்பான தீர்மானத்தை முறியடித்த ஆரிய பார்ப்பன திருச்செங்கோடு இராஜகோபாலாச்சாரியாரின் சதிவலையை விவரித்து, அதன் பின்புல அரசியலைப் பேசியிருப்பார் அண்ணா. நிகழ்ச்சியும் விளைவும் காங்கிரஸ் தொடர்பானது என்றாலும், அதில் நிகழும் ஆரிய- திராவிட மோதலை முன்னிறுத்தி, அம்பலமாக்குவதில் திராவிட அரசியல் ஒருபோதும் தயங்கியதில்லை.

1954-ஆம் ஆண்டில் இராஜாஜி எதிர் காமராஜர் மோதலில், காமராஜர் சார்பு நிலையை பெரியார் மட்டும் எடுத்துவிடவில்லை. அண்ணாவும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினார். பெரியார் **'பச்சைத் தமிழன்'** என காமராஜரை வரவேற்றார். அண்ணாவோ, முதல்வரான காமராஜரை குடியாத்தம் இடைத்தேர்தலில் போட்டியிட 'குணாளனே! குலக்கொழுந்தே! வா' என வாழ்த்தி வரவேற்றார். திராவிட அரசியல் என்பது கழகத்தவரது நலன் கருதியது மட்டுமில்லை, ஒட்டுமொத்த திராவிடத் தமிழர் நலன் கருதியது என்பதற்கு இதுவே சான்று. ஆனால், இதையே தேசியவாத திராவிடத் தமிழர் கருதி இயங்கினர் என்று சொல்வதற்கில்லை.

## வள்ளுவன் குன்றத்து வெள்ளம்!

வள்ளுவன் குன்றத்தின் மக்கள் பெரியவர் தலைமையில் திரண்டு வந்து, கானாற்றின் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த அணைகட்ட கோருகிறார்கள். மக்கள் கோரிக்கையை மறுத்து நிராகரிக்கும் வலியன்கோட்டின் திவானின் பேராசை, வள்ளுவன்குன்றத்தின் தங்கத்திலான வள்ளுவர் சிலையைக் கைப்பற்றுவது. வள்ளுவர் சிலையின் கையிலிருக்கும் உலக உருண்டையில் வைரங்களும் ரத்தினங்களும் இருப்பதாக எண்ணுகிறார் திவான் ஆளவந்தார்.

வள்ளுவன் குன்றத்திற்கோ வள்ளுவன் அதன் அடையாளம். வள்ளுவன் வகுத்த குறளின் முப்பால்தான் தமிழினத்தின் பெருமை. அதுதான் தமிழ் மரபு, குறள் மரபு மற்றும் தமிழர் தம் விடுதலை மரபு ஆகியவற்றின் சின்னம்.

வள்ளுவன் குன்றம் வெள்ளத்தால் அழிந்தபோது வள்ளுவர் சிலை புதையுண்டு போகிறது. வள்ளுவர் சிலை கண்டடையப்படுவதே மக்கள் ஒன்றிணைந்து கானாடு ஆற்றின் வெள்ளச் சேதாரத்தைச் செப்பனிடும் பணியின் போதுதான். வள்ளுவன் குன்றத்தின் வெள்ளச் சேதார அழிவு ஒரு வகையில், கடல் கொண்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நினைவூட்டத் தவறுவதில்லை.

**அண்ணாவோ, முதல்வரான காமராஜரை குடியாத்தம் இடைத்தேர்தலில் போட்டியிட 'குணாளனே! குலக்கொழுந்தே! வா' என வாழ்த்தி வரவேற்றார்.**

## திரையில் அண்ணாவும் தம்பிகளும்

திரைப்படத்தின் மைய இழையாக வள்ளுவன் சிலை. அதன் பொருள் மதிப்புக்காகக் கவர்ந்து கொள்ள நினைக்கும் வலியன் கோட்டு திவான் ஆளவந்தார். அதன் கருத்தியல் பொருளுக்காக விட்டுத் தர மறுக்கும் 'ஒரு போதும் யாருக்கும் தலைவணங்காத வள்ளுவன் குன்றத்தின் தலைவர் 'அண்ணா' தங்கதுரை. கதைக்களத்தில் தம்பிதுரை (கலைஞர் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள்) பேச்சுகள் உணர்ச்சிகரமானவை.

திவானையும் அரசரையும் காண வந்த போது, 'அரசர் ஆண்டவனின் அவதாரம். பூர்வஜென்மத்தின் புண்ணியத்தால் புவியாளும் வரம் பெற்ற புனிதர் என்றெல்லாம் கூறுகிறார்கள். அந்த விசித்திரப் பிறவியை வேடிக்கை பார்க்கலாமென்றுதான் வந்தேன்' என்கிறார்.

அரசரிடம் வைக்கப்படும் கோரிக்கை, 'அணை கட்ட வேண்டும் - தொழிற்சாலை வேண்டும் - ஆளுக்கொரு காணி நிலம் வேண்டும்' என்பதே. அண்ணா பேசுகிறார், 'மகாராஜா மலைவாசத்துக்குப் போய் வருவதற்குள் இங்கே பலர் பரலோக பிராப்தியடைந்து விடுவார்கள்'. (கும்பி கருகுது. குடல் வேகுது. குளு குளு ஊட்டி ஒரு கேடா?).

திவான் வளர்ப்பு மகன் திருமேனி, தங்கதுரையின் தங்கையை மணந்துகொண்டு வள்ளுவர் சிலையைப் பிணையாகக் கேட்கும் போது, அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் தங்கதுரை, "தங்கை அழுதால் தாங்கிக் கொள்வேன். என் தாய்த்திரு நாடு அழுதால் தாங்கிக் கொள்ள முடியாது" என்கிறார். "எங்களைப் பெற்றெடுத்த மண்மாதா அடிமை விலங்கு பூட்டப்பட்டிருக்கிறாள்" எனக் குமுறுகிறார்.

போருக்குப் புறப்படும் மருமகனை, மனைவி மக்களின் நிலையை யோசித்தாயா என்கிறார் பெரியவர். "நாடு அமைதியாக இருக்கும் வரைதான் மனிதருக்கு வீடு, மனைவி, மக்கள் எல்லாம்" எனத் தயக்கமின்றிப் புறப்படுகிறார். தம்பிதுரை அரசரின் மகளை, இளவரசியைக் காதலிக்கிறான் என்பதைக் கேட்டு வெகுண்டெழுந்து சீறிப்பாய்கிறார். காதலுக்கு விரோதியில்லையெனினும், லட்சியத்துக்கு ஊறு விளைவிக்கக்கூடிய காதலைக் கடும் வார்த்தைகளால் நிராகரிக்கிறார். அதே வேளையில் வெற்றிகரமாக 'வள்ளுவர் சிலையோடு' குன்றம் நோக்கி வரும் தம்பியை ஆரத்தழுவிப் பாராட்டவும் தயங்குவதில்லை. அவருக்கு உதவிய காதலி இளவரசியை மணக்க சம்மதிக்கிறார்.

## கழக அரசின் செயல் வடிவம்

வள்ளுவர் சிலை கதைக் களத்தின் - அரசியல் மோதலின் மையம் என்பதைக் காணும்போதே கலைஞரின் வள்ளுவர் மீதான ஆதர்சம் வெளிப்படுகிறது. திராவிடச் சினிமாக்களில் பேசப்பட்டவை, பின்னர் கழக அரசுகளின் செயல் திட்டம் ஆனது வரலாறு.

அந்த வகையில், கலைஞர் நிர்மாணித்த சென்னை வள்ளுவர் கோட்டமும், குமரியில் இன்றும் உலகம் வியக்க உயர்ந்து நிற்கும் வள்ளுவன் சிலையும் அதற்கான மிகச் சிறப்பான மாதிரிகள். மிக அதிகமான எண்ணிக்கையில் அணைகள் கட்டியது கலைஞர் ஆட்சியில்தான். விவசாயக்கூலிகளின் குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கியதும், இரண்டு ஏக்கர் நிலம் வழங்கியதும் சமத்துவபுர நாயகர் கலைஞரே.!

இந்தத் திரைப்படத்தில் ஜெமினி கணேசன், சரோஜாதேவி, நம்பியார், எம்.என்.ராஜம், தங்கவேலு மற்றும் பலர் நடித்துள்ளனர்.

...படம் விரியும்

## சகிப்புத்தன்மையற்ற சதிவலை!



வலதுசாரி வகுப்புவாதிகளுக்கு எதிராகச் சமரசமில்லாமல் களமாடி வருகிறவர், நடிகர் பிரகாஷ் ராஜ். நேரடியாக அரசியல் மேடைகளிலும், சமூக வலைதளங்களிலும் வகுப்புவாதிகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்பி வருகிறார்.

'தோன்றியதைக் கேட்கிறேன்' என தனது டிவிட்டர் பக்கத்தில் பிரதமர் மோடியை தொடர்ச்சியாக விமர்சனம் செய்து வருகிறார். மாநில அரசே உதவி செய்த இனப்படுகொலை என மணிப்பூர் விவகாரத்தில் நேரடியாக பா.ஜ.க. அரசை குற்றம் சாட்டியவர் பிரகாஷ்ராஜ்.

இந்த நிலையில், கர்நாடக மாநிலத்தின், சிவமொக்கா மாவட்டத்தில் உள்ள ஒரு கல்லூரியில், 'சினிமா மற்றும் சமூகம் குறித்த உரையாடல்' என்கிற தலைப்பில் மாணவர்கள் மத்தியில் உரையாடும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளார். அப்போது, அங்கு திரண்ட பாரதிய ஜனதா கட்சியின் மாணவர் அமைப்பினர், அவருக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், கூட்டம் முடிந்து அவர் சென்றதும் நிகழ்ச்சி நடந்த அரங்கம் தீட்டுப் பட்டதாக மாட்டுக் கோமியம் தெளித்துள்ளனர். இந்த மாணவர் அமைப்பினர்தான் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்து கல்லூரி வரக்கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து, உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியவர்கள்.

சாதிக்கத் தூண்டும் வயதில், சகிப்புத்தன்மையற்ற சதிவலைக்குள் தள்ளுகிறது பா.ஜ.கவின் மதவெறி அரசியல். பிரகாஷ்ராஜ் நிகழ்ச்சிக்கு காட்டப்பட்ட எதிர்ப்பு அதற்கு ஓர் உதாரணம்.

## :ப்ளாஷ்பேக்



## தாத்தாவும் பேரனும்!



சலாவுதீன்

கழகம் சந்தித்த முதல் தேர்தலில் (1957), தலைவர் கலைஞர் வென்ற குளித்தலை தொகுதியில், என் தாத்தா கே.எஸ். இமாம் சாகிப் அவர்கள் தீவிரமாக உழைத்தார், பிரச்சாரம் மேற்கொண்டார் என்பதை, தலைவர் கலைஞர் பல முறை குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார். சரியாக 30 ஆண்டுகள் கழித்து, 1987-ஆம் ஆண்டு கரூர் மாவட்டம், குளித்தலை நகரப் பகுதியில் தெருமுனைப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது குளித்தலை நகரம் முழுவதும், இரு வண்ணக் கொடிகளை ஏற்றி வைத்து, தளபதி அவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டார்கள். அதன் ஒரு பகுதியாக என் தாத்தாவின் வீட்டின் முன்பு தளபதி அவர்கள் உரையாற்றியபோது இப்படம் எடுக்கப்பட்டது. அப்போது நானும் உடனிருந்தேன்.

**-அ.சலாவுதீன், தலைமைக் கழகப் பேச்சாளர், குளித்தலை, கரூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்ன ஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### காலணிகளுக்கு பாலிஷ்!

**1977-ஆம் ஆண்டுத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், கழக வேட்பாளர்கள் தேர்வு விரைவு படுத்தப்பட்டது. மிசாவில் இருந்து மீண்ட காலம் என்பதால், வழக்குச் செலவுகள், பிரச்சாரச் செலவுகள் எனக் கடும் நிதி நெருக்கடியில் இருந்தது கழகம். தலைமைக் கழகத்தின் சார்பில், சுவரொட்டி கள்கூட அச்சிட்டு வழங்க முடியாத நிலை இருந்தது. கழகத்தின் தேர்தல் நிதி திரட்டுவதற்காகத் திட்டமிட்ட நாளில், இளைஞர் அணி சார்பில், காலணிகளுக்கு பாலிஷ் போடும் இயக்கம் நடத்தி நிதி திரட்டினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 206




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.